அவர்களுக்கு அறிவுறுத்தல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இனி எதிர் காலத்தில் இது மேலும் செம்மைப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு.

*9336—திரு. எஸ். சிவலோகம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல, ஈட்டிய விடுப்பு ஆசிரியர்களுக்கும் அதே விகிதத்தில் வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவரவர்களே இந்தக் கோரிக்கையினை ஏற்பதற்கு வாய்ப்பில்லை.

9–15 மணி

திரு. எஸ். சிவலோகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு கொடுப்பது போல, ஆசிரியர்களுக்கும் கிடைக்க மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு ஊழியர்களைப்போல அத்தனை நாட்களிலும், வேலைசெய்வதற்கு ஆசிரியர்கள் முன்வந்தால், அதேமுறை அவர்களுக்கும் கையாளப்படும்.

பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்குதல்.

*9656 திரு. ச. அழகுவேலு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற் படிப்பு வகுப்பு துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?